[1979 மார்ச் 15

[முற்பகல் 9·50]

திரு. வி. கே. கோதண்டராமன்: ஐயா, இந்த ராணுவ வீரர்கள், முன்னாள் இராணுவ வீரர்கள், போராட்ட வீரர்கள், அகதிகள் இவர்களுடைய குழந்தைகளுக்கு எல்லாம் கல்வி படிப்பதற்காக உதவி தொகை கொடுத்திருப்பதைப் பற்றி கூறினார்கள். ரொம்ப சந்தோஷம். அது எந்த அளவுக்கு கொடுக்கப்படுகிறது என்பது வேறு விஷயம். முன்னாள் ராணுவ வீரர்களின் குழந்தைகளுக்கு உத்தியோகங்கள் வழங்குவதில் சலுகைகள் வழங்குவது போல், விடுதலை போராட்ட வீரர் களுடைய குழந்தைகளுக்கும் முன் உரிமை சலுகை வழங்கப் படுகிறதா? இல்லையென்றால் இந்தச் சலுகை அவர்களுக்கும் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இதற்கு தனியாக கேள்வி போடவேண்டும்.

திரு. இரா. முத்தையா: பேரவைத் தலைவர் அவர்களே, விடுதலை போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கு இந்த சலுகைகள் கொடுக்கப்படுவதைப் போன்று இந்த கல்வி உதவித் தொகை இந்தி எதிர்ப்பு போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கு தரப்படுமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்; தனிக் கேள்வி வேண்டும்.

திரு. கா. சுப்ரவேலு: தலைவர் அவர்களே, இந்தக் கல்வித் துறையில் உதவித் தொகை கொடுக்கப்படுவதில், நான் அறிந்த வரையில், நாம் எந்த காரியத்திற்காக கொடுக்க வேண்டும் என்று முயற்சி எடுத்துக் கொள்கிறோமோ அந்தக் காரியத்திற்கு பயன்படுத்துகின்ற அளவுக்கு உரிய காலத்தில் நிச்சயமாக கொடுப்பதில்லை. ஒவ்வொரு ஆண்டின் கடைசி காலத்தில் கொடுக்கப்பட்டு வருகின்ற நிலைமை இருந்து வருகிறது. இதை மாற்றி வருட ஆரம்பத்திலேயே இந்த மாதத்திற்குள் நிச்சயமாக கொடுக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்ட ஒரு வரையறை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இந்தக் குறைபாட்டைப் போக்க அரசு முயற்சி எடுக்கும்.

தனியார் கல்லூரிகளை ஒழுங்குபடுத்தும் சட்டம்.

*வினா எண். 408 திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பார:

1979 மார்ச் 15]

(அ) தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்குபடுத்தும்) சட்டம் 1976—ல் பிரிவு 38 (1), 21-ன்படி அப்பீல் செய்ய டிரிபூனல் (Tribunal) போடப்பட்டுள்ளதா?

(ஆ) இல்லையெனில் கால தாமதத்திற்கு காரணம் யாது?

மாண்புமிகு திரு.செ. அரங்கநாயகம்: (அ) & (ஆ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ரா. கிருஷ்ணன்; பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தைப் போட்டு இன்றைக்கு மூன்று ஆண்டுகளாகி விட்டது. இன்னும் ஒரு டிரிபூனல் போடுவது பற்றி அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்வது வேடிக்கையாக இருக்கிறது. ஏற்கனவே கேரளாவிலுள்ள ஒரு கேஸ்—க்கு வழங்கப் பட்ட தீர்ப்பின் அடிப்படையில்-சுப்ரீம் கோர்டில்—கொடுத்த தீர்ப்பில்—A.I.R. 59 page 52, Supreme Court Judgement இதன்படி ட்ரிபூனல் அமைப்பதற்கு எந்தவிதமான தடையும் இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பல்வேறு தனியார் கல்லூரிகளில் கல்லூரி ஆசிரியர்கள் வேலைநீக்கம் செய்யப் பட்டு வருகிறார்கள். ஆகவே ட்ரிபூனல் அமைப்பதற்கு விரைவில் முடிவு எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்; இது ஒரு முக்கியமான பிரச்னையாக இருக்கின்ற காரணத்தால் இதை விளக்கமாக சொல்ல விரும்புகிறேன். சென்னையில் ஒரு தனி நீதிபதியையும் அவருக்கு உதவியாக சில அலுவலர்களையும் நியமிக்க ஓர் செயற்குறிப்பை அனுப்பியிருந்தது. தனி நீதிபதி நியமிக்கத் தேவையான வேலைப்பளுவில்லாதக் காரணத்தால், மாவட்டங்களில் பணிபுரியும், மாவட்ட நீதிபதிகளை மேற்கூறிய சட்டத்தின் கீழ் வரும் மேல் முறையீடுகளை பரிசீலிக்க ஆணை யிடலாம் என நீதித்துறை கருத்து தெரிவித்துள்ளது. இக்கருத்தினை ஏற்று மீண்டும் உயர்நீதிமன்றத்தின் கருத்து பெறப்பட்டது. உயர்நீதிமன்றம் ஏனைய நீதிபதிகளுக்கு அதிக பணிப்பளு உள்ள காரணத்தால் தனி நீதிபதியை அமைப்பதனை மீண்டும் வலியுறுத்தியது. இதனை அரசு ஏற்றுக் கொண்டது. உயர்நீதிமன்றத்தின் செயற்குறிப்பு பரிசீலனைக்கு அனுப்பப் பட்டது. தலைமைச் செயலர் இவ்வழக்குகளை வணிகவரி மேல்முறையீட்டு நிதிப் பேராய நீதிபதியிடம் ஒப்புவிக்கலாமா என வணிகவரி மற்றும் அறநிலையத்துறை செயலரைக் கேட்டுக்கொண்டார். வணிகவரி மேல்முறையூட்டு நிதிப் பேராய நீதிபதியிடம் அதிக வழக்குகள் நிலுவையில் உள்ளமையால் இவரிடம் கல்லூரி வழக்குகளை ஒப்படைக்க இயலாது என தெரிவிக்கப்பட்டது. தொழிற் வழக்கு மன்றங் களில் உள்ள நீதிபதிகளுக்கும் வேலை மிக அதிகமாக உள்ளதால் கல்லூரி கல்வி வழக்குகளுக்கு தனி நீதிபதியை

[1979 மார்ச் 15

சென்னையில் ஏற்படுத்தலாம் என கருத்து தெரிவிக்கப் பட்டுள்ளது. அனேகமாக விரைவில் இதன் மீது முடிவு எடுக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் ; இப்போது ட்ரிபூனல் அமைக்கப்பட்ட பின்னால் பாதிக்கப்பட்டவர்கள் இதில் முறையிட்டுக்கொள்ள முடியுமா? அப்படி ட்ரிபூனலில் முறையிட்டுக் கொள்ளும்போது, முன்னாலேயே வேலையிழந்தவர்கள் வழக்குப் போட்டால், முன்னாலிருந்தே 'ரெட்ராஸ்பெக்டீவ் எபக்ட்' கொடுத்து வேலை அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

தேயிலைத் தோட்டப்பகுதிகளில் தெரு விளக்குகள்.

வினா எண். 409 திரு. க. அரங்கசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தேயிலைத் தோட்டங்களில் உள்ள தெருக்களுக்கு விளக்குகள் போட தேயிலைத் தோட்ட அதிபர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தும் உத்தேசம் ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : ஆம். தேயிலை மற்றும் மலைத் தோட்ட நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்கள் குடியிருப்புகளுக்கும், தெருக்களுக்கும் தேவையான மின்விளக்கு வசதிகள் செய்து தருவது குறித்து சம்பந்தப் பட்ட தோட்ட உரிமையாளர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தப்படுகின்றது.

திரு. கே. உச்சி ; தலைவர் அவர்களே, இப்படி போடப் பட்ட சில திட்டங்களில் போட்ட தெரு விளக்குகளும் வீடுகளில் உள்ள விளக்குகளும் எரியாமல் அடிக்கடி ரிப்பேர் ஆகிக் கொண்டிருக்கிறது. ஆகவே இதை நல்ல முறையில் ரிப்பேர் செய்து அவைகள் நிரந்தரமாக எரிவதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்தப் பகுதிகளிலே இந்தக் குறைபாடுகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்தால், அந்தந்த மாவட்ட ஆட்சியாளர்களிடம் சொல்லி தக்க நடவடிக்கை எடுக்கப்படும். மானிடரிங் செல் என்று ஒன்றிருக்கிறது. அவர்தான் அந்தக் குழுவின் தலைவர்.